## பாசுரம் - 3

*ஒங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி *
நாங்கள் நம் பாவைக்கு சாற்று நீராடினால் *
தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து *
ஓங்கு பெரும் செந்நெல்லோடு கயல் உகள *
பூம் குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்ப *
தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலைப் பற்றி
வாங்க * குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து ஏலோர் எம் பாவாய்.*

3.1 முதல் பாசுரத்தாலே பரத்ததுவ நிர்ணயம். இரண்டாம் பாசுரத்தாலே அந்த தத்துவத்தை அனுபவிக்க ஸாத்யோபாயமான ப்ரபத்தியின் அவசியத்தையும் அதன் ப்ரகாரத்தையும் சொன்னது. இதை செய்து முடித்தவர்தாம் *வையத்து வாழ்வீர்காள்*. செய்வன செவ்வன செய்து முடித்த அந்த கருத க்ருத்யர்கள், க்ருதாத்தர்களாகி அனுபவிக்கும் புருஷார்த்த பலனை சொல்வது இது.

3.2 *பக்த்யா பர மாயா வாபி ப்ரபத்யா வா மஹாமதே*
*ப்ராப்யோகம் ந அந்யதா ப்ராப்யோ மம கைங்கர்ய லிப்சுபிகி*
அஹிபுத்ந்ய ஸம்ஹிதை

பக்தியோ இல்லை ப்ரபத்தியோதான் என்னை அடைய வழி என்ற பகவானின் வாக்கின்படி செய்ய வேண்டியவைகளை செய்து முடித்தவர்.

3.3 *நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்*
*உலகிலும் இனி உன்னை விட்டு * ஒன்றும்*
*ஆற்றகின்றிலேன் அரவினணை அம்மானே*
- திருவாய்மொழி 5-7-1

நான் உபாயம் என்று எந்த கர்மாவையும் அநுஸந்தித்தவன் இல்லை. அதன் பயனான ஞானம் இல்லாதவன். இது இரண்டும் இல்லாதலால் பக்தி ஏதும் பெற்றிலேன். ஆனால் உன்னை அனுபவிக்க, உனக்கு கைங்கர்யம் செய்ய ஆசை மட்டும் உள்ளது. ஜனகர் போலே கர்மாவும், ஜடபரதர் போலே ஞானமும், பிரகலாதன் போலே பக்தியும் ஒன்றுக்கு ஒன்று அநுகுணமான யோகங்கள் ஏதும் செய்தேனில்லை என்று ஆகிஞ்சன்யத்தை முன்னிட்டு ப்ரபத்தி.

3.4 *க்ருபணா: ஸ்ரீதி$_4$ய: க்ருபா ஸஹாயம்*
*ஶரணம் த்வாம் ரண புங்க$_3$வ ப்ரபந்ந: |*
*அபவர்க$_3$ நயாத்$_3$ அநந்ய ப$_4$ாவா:*
*வரிவஸ்யா ரஸம் ஏகம் ஆத்$_3$ரியந்தே ||*

- பரமார்த்த ஸ்துதி 6

என்று கைம்முதல் இல்லாத புத்திமான்கள் தம்முடைய ஆகிஞ்சன்ய அநந்யகதித்வத்தை முன்னிட்டு எம்பெருமானின் கருணையே துணையாய் கொண்டு அவனுக்கு செய்யும் கைங்கர்ய ஆனந்தத்தையே குறியாகக் கொண்டு அவன் திருவடிகளில் ப்ரபத்தி எனும் நோன்பை செய்து முடித்தவர்.

3.5 *ஆறு எனக்கு என நின் பாதமே * சரணாக தந்து ஒழிந்தாய் **
*உனக்கு ஓர் கைம்மாறு நான் ஒன்றிலேன்* எனது ஆவியும் உனதே*
*சேறுகொள்கரும்பும் பெருஞ்செந்நெல்லும் மலிதண்சிரீவரமங்கை*
*நாறு பூந்தண் துழாய் முடியாய்! தெய்வநாயக!*

- திருவாய்மொழி 5-7-10

எனக்கு நின்பாதமே சரணாக ஆறு தந்து ஒழிந்தாய்- எம்பெருமன் நீயே உபாயம், எம்பெருமான் நீயே பலன் என்னும் அறிவைக் கொடுத்தாய் என்று ஷடங்க யோகம் செய்து முடித்தவர்.

3.6 *ஸ்ரீமாந் நியத பஞ்சாங்க$_3$ம் மத்$_3$ ரக்ஷண ப$_4$ரார்பணம்*
*அசீகரத் ஸ்வயம் ஸவஸ்மிந் அதோஹமிஹ நிர்ப$_4$ர:*

- ந்யாஸ தஸகம் 10

என்று ஸ்ரீமந் நாராயணனிடம் இன்றிமையாத அஞ்சு அங்கங்களோடு ப்ரந்யாஸம் செய்து தமக்கு சுமை ஏதும் இல்லாது மகிழ்ந்திருக்கும் ப்ரபன்னர்கள்.

3.7 அந்த ப்ரபன்னர்கள் எப்படிப்பட்டவர் எனில்
*மன்னவர் விண்ணவர் வானோர் இறை ஒன்றும் வான் கருத்தோர்*
*அன்னவர் வேள்வி அனைத்து முடித்தனர் அன்புடையார்க்கு*
*என்ன வரம் தர என்ற நம் அத்திகிரித் திருமான்*
*முன்னம் வருந்தி அடைக்கலம் கொண்ட நம் முக்கியரே*

- அதிகார சங்கிரகம் 20 (க்ருதக்ருத்யாதிகாரம்)

பலன்கள் யாவும் தந்து, மனம் நிறையாது மற்று என்ன தருவோம் என காத்திருக்கும் எம்பெருமான் திருவடி பற்றிய ப்ரபன்னர்கள் செய்வன செய்து முடித்தவர்கள். அவரே அரசர். பரமபதமே நினைவாக உள்ள நித்யர்.

3.8 ப்ரபன்னனுக்கு புருஷார்த்த பலன் என்பது பரமபதம் சென்ற பிறகுதான் என்றில்லை. ப்ரபத்தி அனுஸந்தித்த அந்த க்ஷணமே அங்கேயே ஆரம்பம். ப்ரபத்தி அனுஷ்டித்த அநந்தரமே புருஷார்த்த பலன்.

3.9 *தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
என்று இகலோக இன்பத்தையும்,
*நீங்காத செல்வம் நிறைந்து*
என்று பர லோக பராப்தியையும் சொன்னது. இது தேசத்தில் வேறுபாடே தவிர பலனில் ஒன்று.

3.10 *பக்திக்கு உறுப்பாம் கருமமும் ஞானமும் முதலில் சொல்லி*
*சக்தியிலா மாந்தருக்கு உயர்த்தி ப்ரபத்தி மற்ற களைதள்ளி*
*தீயில் தூசாய் மாசு நீக்கி வேண்டுமன்றே வான் அளிக்கும்*
*மறையீந்த சீமாதவன்தாளே சரணென்றே கனிந்து களிக்கும்*
- இறுதியின் சுருதி 11

கடினமான பக்தியோகமும் அதன் அங்கமான கர்ம ஞான யோகமும் செய்ய இயலாதவர்களே அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்கு உள்ள ஒரே உபாயம் ப்ரபத்தி என்ற சரம ஸ்லோகத்தை உபதேசித்த கீதாசாரியன் திருவடிகளே அடைக்கலம் என்று அடைந்து மகிழ்ந்தவர்கள்.

3.11 *ஒன்றே புகல் என்று உணர்ந்தவர் காட்டத் திருவருளால்*
*அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித் திருமால்*
*இன்றே இசையின் இணையடி சேர்ப்பர் இனிப் பிறவோம்*
*நன்றே வருவது எல்லாம் நமக்குப் பரம் ஒன்று இலதே*
அமிர்த ரஞ்சனி -18

ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே ஆறும், பேறும் என ஆசாரியர்கள் காட்டி, சேதனர்களை அவனடியில் புகுத்த, பகவானும் பிராட்டியின் பரிவாலே அதை ஏற்க, ப்ரபன்னர்கள் மோக்ஷோபாயமாய் செய்வது இனி ஒன்றுமில்லை என்று இன்பமாய் இங்கே நாளைக் கழிப்பரே.

3.12 க்ருதக்ருத்யர்களான ப்ரபன்னர்களே *ஒங்கு பெரும் செந்நெல்*

3.13 *ஸமயோ பநதைஸ் தவ ப்ரவாஹை:*
*அநுகம்பே க்ருத ஸம்ப்லவா த4ரித்ரீ |*
*ஶரணாக3த ஸஸ்ய மாலிநீயம்*

வ்ருஷஶைலேஶ க்ருஷீவலம் தி4நோதி ||

தயாஸதகம் - 21

உழவனாகிய எம்பெருமான், ஜீவனாகிய விதையை, பூமி என்னும் நிலத்தில் விதைத்து, கருணை என்னும் நீர் பாய்ச்சி, ஓங்கு பெரும் செந்நெல்லாய் வளர்ந்த ப்ரபன்னர்களைக் கண்டு பூரிக்கிறான்.

3.14 முதல் இரண்டு பாட்டிலே பர, வ்யூகத்தைச் சொல்லி இப்பாட்டாலே விபவத்தையும் அனுபவிப்பது.

3.15 ஓங்கி எனும் பதம் அதற்கு முன் சுருங்கி இருந்தை காட்டுகிறது.

3.16 பி4க்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரத2மாஸ்ரமம் த்வம்
க்ருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா:

- தேஹளீஸ ஸ்துதி -12

பாற்கடலிலே பள்ளி கொண்ட பரமன், தேவர்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களை காக்கவே ஸகல ஸம்பத்தையும் உடைய திருவுக்கும் திருவாகிய செல்வன், அகலகில்லேன் என்று திருமார்பிலே குடி கொண்டிருக்கும் தனக்கு பிரியமான அந்த பிராட்டியை ஒருமான் தோலால் மூடி மறைத்து, யாசிக்க உகந்த ஆஸ்ரமம் என்று பிரம்மசரியத்தைப் பூண்டு, குறுகிச் சென்று தானே யாசித்த வாமனன் உத்தமன்.

3.17 வைரோசநே: ஸதஸி வாமந பூ4மிகாவாந்
விக்ராந்தி தாண்டவ ரஸேந விஜ்ரும்ப4மாண: |
சக்ரே ப4வாந் மகர குண்ட3ல கர்ண பாஶ:
ஶ்யாமைக மேக4 ப4ரிதாமிவ ஸப்த லோகீம் ||

- தேஹளீஸ ஸ்துதி -8

விரோஜனனின் மகனாகிய பலிச் சக்ரவர்த்தியின் யாக சாலையில், மீன்போல் குண்டலங்களை காதில் அணிந்து ஏழு லோகங்களையும் ஒரு பெரும் கரிய மேகம் சூழ்ந்து நடனமாடும் வாமன வேஷம் கொண்ட அவனே ஓங்கி உலகளந்த உத்தமன்.

3.18 இந்திரன் சோக நீராலே சுருங்கியவன் பலி வார்த்த நீராலே ஆனந்தித்து வளர்ந்தான்.

3.19 ஒரு குறளாய் இரு நிலம் மூவடி மண் வேண்டி

*உலகு அனைத்தும் ஈரடியால் ஒடுக்கி, ஒன்று*
*தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த*
*தாடாளன் தாள் அணைவீர், தக்க கீர்த்தி*
*அருமறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும்*
*அங்கங்கள் அவை ஆறும் திசைகள் ஏழும்*
*தெருவில் மலி விழாவளமும் சிறக்கும் காழிச்*
*சீராம விண்ணகரமே சேர்மினீரே*

- பெரிய திருமொழி 3-4-1

என்னும் கணக்கு செய்யும் இந்த வாமனன் *ஒங்கி உலகளந்த உத்தமன்*

3.20 *ஸதை3க ரூப ரூபாய விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே ||*

- ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் 5

அடைக்கலம் அடைந்த அடியவருக்கேயென, தன் அப்ராக்ருத திருமேனியிலும் விகாரத்தை அடைவித்துக் கொண்ட எம்பெருமான் *ஒங்கி உலகளந்த உத்தமன்*

3.21 *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்4ருஶம் ப4வதி து3க்கி2த:*

- ராமாயணம்

மற்றவர் துன்பத்தில் அவரினும் மேலாய் துக்கப்பட்டு, மேலும் பட்டுக் கொண்டே இருப்பவன் ராமன். இவனுடைய துக்கமும் கல்யாண குணமன்றோ!

3.22 பண்டிதன், பாமரன், சந்யாஸி, சண்டாளன் என வேறின்றி அனைத்து ஜீவ ராசிகளையும் தன் திருவடியால் தொட்டு அளந்து அருள் செய்த உத்தமன்

3.23 *சதுர்வித4ா ப4ஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதி நோர்ஜீந: |*
*ஆர்தோ ஜிஜ்ஞாஸு: அர்த2ார்தீ ஜ்ஞாநீ ச ப4ரதர்ஷப4 ||*

- பகவத்கீதை 7-16

இழந்த, புதிய செல்வத்தையும் பெற விரும்புவன், ஜ்ஞான ஸ்வரூபனான தன்னையே காண விரும்புவன், பகவானையே உபாயமும் பலனும் என்று விரும்புவன் என்னும் புண்யவான்களுக்கு அவர்கள் விரும்பும் ஐச்வர்யம், கைவல்யம், பகவத் ப்ராப்தி எனும் மூன்று பயன்களை மூவடியாலே வாரி வழங்குவதால் *உத்தமன் பேர் பாடி*

3.24 மூவடியாலே பர பக்தி, பர ஞான, பரம பக்தியை அளிப்பதால் *உத்தமன் பேர் பாடி*

3.25 மூவடியாலே *ஆத்யாத்மிக, ஆதி பௌதிக, ஆதி தைவிக* என்ற தாபத்ரயங்களை தீர்ப்பதாலே *உத்தமன் பேர் பாடி.*

3.26 *புருஷ:* என்பது அறிவில்லாத அசித்தைவிட உயர்ந்த *பக்தன்.*
*உத் புருஷ:* என்பது சரீரம் உடைய பக்த ஜீவனைவிட உயர்ந்த *முக்தன்.* (good)
*உத்தர புருஷ:* என்பது ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷம் போய்ச் சேர்ந்த முக்தனைவிட உயர்ந்த *நித்யன்.* (better)
*உத்தம புருஷ:* என்பவன் அந்த நித்யரைவிட உயர்ந்த *பரம புருஷன்.* (best)
சிறந்ததை தமம் என்று விசேஷிப்பது. ப்ரியம், ப்ரியதரம், ப்ரியதமம் என்பது போலே

3.27 *உத்தம: புருஷ: து அந்ய: பரமத்மா இதி உத3ாஹ்ருத:*
*யோ லோகத்ரயம் ஆவிஶ்ய பி3ப4ர்தி அவ்யய ஈஶ்வர:*
- பகவத்கீதை 15-17

அந்த புருஷோத்தமன் இந்த க்ஷர, அக்ஷர புருஷர்களைவிட வேறுபட்டவன். பரமாத்மா என்று அழைக்கப்படும் அவன் மூன்று லோகங்களில் எல்லாவற்றிலும் ப்ரவேசித்து அவற்றை தாங்கி போஷிக்கிறான். அழிவில்லாத அவனே ஈச்வரன்.

*யஸ்மாத் க்ஷரம் அதீத அஹம் அக்ஷராத்3 அபி ச உத்தமம்*
*அத: அஸ்மி லோகே வேதே3 ச ப்ரதி3த: புருஷோத்தம:*
- பகவத்கீதை 15-18

அழியும் பொருளைவிட வேறானவன். அழியாத ஜீவனை விட சிறந்தவன் அவனே உத்தமன்.

3.28 *அவிகாரய ஶுத்3த4ாய நித்யாய பராமத்மநே |*
- ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் 5

முமுக்ஷுக்கள் போல் அன்றி விகாரங்கள் அற்றவனாய், முக்தர் போல் அன்றி என்றும் சுத்தனாய், நித்யரைவிட உயர்ந்த பரம் பொருளாய் திகழ்பவன்.

3.29 *சதுர்நாம் புருஷார்த்தானாம் ததா புருஷோத்தம: ஹரி*

என்கிறபடி நான்கு புருஷார்த்தங்களையும் நான்கு கையினால் வாரி வழங்குபவன். இதை ராமயணத்தில் காணலாம்.
தர்மத்தை ரிஷிகளுக்கும், அர்த்தத்தை விபீஷணனுக்கும், காமத்தை சுக்ரீவனுக்கும், மோக்ஷத்தை ஜடாயு, சபரி, வாலி இவர்களுக்கும் அளித்தான் ராமன். யாருக்கு ராமன் மோக்ஷத்தை அளிக்கிறான் என்னில்

*அவதீ ர்ய சதுர்வித4ம் புமர்த2ம்*
*ப4வத3ர்தே2 விநியுக்த ஜீவித: ஸந் |*
*லப4தே ப4வத: ப2லாநி ஜந்து:*
*நிகி2லாநி அத்ர நித2ர்சநம் ஜடாயு: ||*

- பரமார்த்த ஸ்துதி 7

உலகில் பிரந்த எல்லா ஜீவராசிகளும் நாலு விதமான புருஷார்த்தங்களையும் மறுத்து உனக்கே அர்ப்பணம் செய்தவர்களுக்கு நீ எல்லா விதமான பலன்களையும் அளிக்கிறாய், இது ஜடாயு விஷயத்தில் கண்கூடு.

3.30 *யோ மாமேவ ஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் |*
*ஸ ஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத ||*

- பகவத்கீதை 15-19

எந்த ஞானி என்னை புருஷோத்தமன் என அறிந்தவனோ அவன் என்னை எல்லாவிதமாயும் ஆராதித்தவன் ஆகிறான் என்றான் கிருஷ்ணன். அந்த *உத்தமன் பேர்பாடி*.

3.31 *அவர் அவர் தாம் அறிந்தவாறு ஏத்தி*
*இவர் இவர் எம்பெருமான் என்று - சுவர் மிசைச்*
*சார்த்தியும் வைத்தும் தொழுவர் * உலகளந்த*
*மூர்த்தி உருவே முதல்*

- பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 14

என்று உலகத்தை அளந்த திரிவிக்கிரமன்தான் உண்மையான ஆதி தேவன் என்பதால் அவன் *உத்தமன்*.

3.32 *அடி மூன்றில் இவ்வுலகம் அளந்தாய் போலும்*
*அடி மூன்று இரந்து அவனி கொண்டாய் - படி நின்ற*
*நீர் ஓத மேனி நெடுமாலே! * நின்னடியை*
*யார் ஓத வல்லவர்?*

- பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்ததி 5

எல்லா உலகங்களையும் மூன்று அடி கேட்டு அளந்தாயே? உனக்கு மூவடியும் வேண்டுமா? என்பதாலே அவன் *உத்தமன்*

3.33 மருந்தும் பொருளும் அமுதமும் தானே
திருந்திய செங்கண்மால் அங்கே - பொருந்திய
நின்று உலகம் உண்டு உமிழ்ந்த நீர் ஏற்று மூவடியால்
அன்று உலகம் தாயோன் அடி

- பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 4

மருந்து போல் உபாயமும், உபாயத்தால் வந்த நிலையான பொருளான புருஷார்த்தமும் அவனே. அந்த ஆனந்தமான அமிர்தம் போலாயும் உள்ள அந்த மருந்தே உத்தமன். அவன் பேர் பாடி

3.34 குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர் பெய்து
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - கறை கொண்ட
கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை ஆங்கு

- திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்த்தாதி 9

வேத நீரால் எம்பெருமான் பாதத்தை பிரமன் கழுவ, அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தை தன் ஜடாமுடியில் தரித்த சிவனும் மகிழ்ந்த அந்த உத்தமன் பேர் பாடி

3.35 மாமுதல் அடிப் போது ஒன்று கவிழ்த்து அலர்த்தி *
மண் முழுதும் அகப்படுத்து * ஒண் சுடரடிப்போது
ஒன்று விண்செலி இ * நான்முகப் புத்தேள்
நாடு வியந்து உவப்ப * வானவர் முறைமுறை
வழிபடநிறீ இ * தாமரைக் காடு
மலர்க்கண்ணொடு கனிவாய் உடையது
மாய் * இரு நாயிறு ஆயிரம் மலர்ந்து அன்ன *
கற்பகக்காவு பற்பல அன்ன *
முடிதோள் ஆயிரம் தழைத்த *
நெடியோய்க்கு அல்லதும் அடியதோ உலகே

- நம்மாழ்வார், திருவாசிரியம் 5

என்று அந்த நெடியோனுக்கு அல்லது இந்த உலகம் யாருக்கும் அடிமை ஆகாது என்பதால் உத்தமன் பேர் பாடி

3.36 நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்று அறியேன்

- மதுர் கவியாழ்வார், கண்ணி நுண்சிறுத்தமாம்பு 2

என்று அந்த உலகளந்த உத்தமன் திருவடிகளையே கதி என்று கிடந்த திருக்குருக்கூர் நம்பியின் பாவின் இன்னிசையில் ஈர்ந்த மதுரகவி போலே

3.37 *ஏறு அடர்த்ததும் ஏனமாய் நிலம்*
*கீண்டதும் முன்னி ராமனாய்*
*மாறடர்த்ததும் மண் அளந்ததும்*
*சொல்லிப்பாடி*

- குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 2-3

என்று குலசேகராழ்வர் முறையில் *உத்தமன் பேர் பாடி*

3.38 *மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில்*
*தக்கதி தன்று என்று தானம் விலக்கிய*
*சுக்கிரன் கண்ணைத் துறும்பால் கிளறிய*
*சக்கரக்கையானே! அச்சோ அச்சோ*
*சங்கம் இடத்தானே அச்சோ அச்சோ.*

- பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 1-9-7

என்று பெரியாழ்வார் அநுபவித்த உத்தமன் பேர் பாடி

3.39 ஆஸ்சர்ய ஸேஷ்டிதங்களாலும், ஆஸ்ரித பக்ஷபாதத்தாலும், வடிவழகினாலும், வாத்ஸல்யத்தாலும்
*பொல்லாக் குறள் உருவாய் பொற்கையில் நீர் ஏற்றி*
*எல்லா உலகும் அளந்து கொண்ட எம்பெருமான்*

- ஆண்டாள், நாச்சியார் திருமொழி

ஆன வாமனன் கிருஷ்ணனுக்கு ஒரு முன்னோடி (precedence) என்று ஆண்டாள் அனுபவித்த *உத்தமன்*.

3.40 *தாவி அன்று உலகம் எல்லாம் தலை விளாக் கொண்ட எந்தாய்*
*சேவியேன் உன்னை அல்லால் சிக்கெனச் செங்கண் மாலே*
*ஆவியே! அமுதே! என் ஆர் உயிர் அனைய எந்தாய்*
*பாவியேன் உன்னை அல்லால் பாவியேன் பாவியேனே*

- தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை 35

என்று தொண்டரடிப்பொடி வேறு யாரையும் வணங்காத அந்த *உத்தமன் பேர் பாடி*

3.41 *உவந்த உள்ளத்தனாய் உலகம் அளந்து அண்டம் உற*

- திருப்பாணாழ்வார், அமலனாதிபிரான் 2

என்று எல்லா சேதன அசேதனங்களிடத்தும் அளவில்லா அன்பு கொண்டு அருள் செய்யும் *உத்தமன் பேர் பாடி*

3.42 நீள்வான் குறள் உருவாய் நின்று இரந்து மாவலிமண்
தாளால் அளவிட்ட தக்கணைக்கு மிக்கானை
தோளாத மாமணியைத் தொண்டர்க்கு இனியானை
கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே

- திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 11-7-2

என்று திரிவிக்கிரமனை பாடுவது மட்டுமின்றி அவன் புகழை கேட்பீர்களா? என்னும் அந்த உத்தமன் பேர் பாடி.

3.43 லோக விக்ராந்த சரணௌ ஶரணம் தே அவ்ரஜம் ப்ரபே4

- சரணாகதி கத்யம்

என்று எம்பெருமானாரும் கத்யத்தில் அருளினார்.

3.44 ஒன்று உண்டு செங்கண்மால் யான் உரைப்பது * உன்னடியார்க்கு
என் செய்வன் என்றே இருத்தி நீ

- பெரிய திருவந்தாதி 53

என்று தன் அடியவருக்கு எல்லாம் செய்து அதை தன் பேறாக நினைப்பவன் உத்தமன்

3.45 நதே ரூபம் ந ச ஆகாரோ ந ஆயுத4ாநி ந ஆஸ்பத3ம் |
தத2ாபி புருஷகாரோ ப4க்தாநம் த்வம் ப்ரகாஸஸே ||

- ஜிதந்தே ஸ்தோத்ரம் - 5

ந - இருக்காது, தே உனக்கே என்று தன்னுடைய ஸ்வரூப ரூப, குண விபூதிகள் எல்லாம் தனக்கின்றி தன் அடியவர்க்கே என்று இருப்பவன் உத்தமன்.

3.46 தனக்கே இருக்கும் அதமனன்றி, தனக்கும் பிறர்க்கும் என்று இருக்கும் மத்யமனன்றி, பிறருக்கே என்று இருக்கும் தென்றல், நிலவு, சந்தனம் போலே இருப்பவன் உத்தமன்.

3.47 ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம்
உள்ளடி பொரித்து அமைந்த
இருகாலும் கொண்டு அங்கு எழுதினாற்போல்
இலச்சினை பட நடந்து

- பெரியாழ்வார் திருமொழி 1-8-6

என்று எல்லா உலகையும் அளந்து தனக்கே சொந்தம் என்று முத்திரையிட்டு பரத்துவத்தை காட்டிய திரிவிக்கிரமன் உத்தமன்

3.48 விநாஸாய ஸதுஷ்க்ருதாம் என்று பகைவரை பல துன்பங்களுக்கு ஆளாக்கி, ஸித்திரவதை செய்து, கடைசியில் ஸம்ஹாரம் செய்வது

அப்படித்தான் ஸாதுக்களை ரக்ஷிக்க வேணும் என்றில்லாது, *பரித்ராணாய ஸாதுநாம்* என்று மட்டுமே கொண்டு, சுத்தமான அவதாரம் செய்த வாமனன் *உத்தமன்*.

3.49 எங்கோ பிறந்து, என்றோ பிராட்டியுடன் வந்து சேர்ந்துக் கொண்ட மற்ற அவதாரங்கள் போலன்றி, *ஸ்ரீமந் நாராயண* என்பதில் *மத்* என்பதின் பொருளாய் திகழ்ந்த வாமனன் *உத்தமன்*.

3.50 *உத்தமன் பாதங்களில் தத்துவம் சொல்லியே*
*மத்தவையெலாம் சுத்தமில்லை எனத் தள்ளியே*
*வித்தகர் வியக்கும் வடிவு எத்தனை ஆனாலும்*
*அத்தனையுள் கண்டேன் காவலன் வாமனனே*
- மங்கள ஸ்லோகம், தேசத்தின் வாசம்

என்று ரக்ஷித்தவன் *ஒங்கி உலகளந்த உத்தமன்*.

3.51 *ஸ்ரீராணம் அஸீராணாம் ஸாம3ந்யம் அதி தைவதம்*
- விஷ்ணு தர்மம்

தன் பேர் கெடாதவாறு, ஸம்ஹாரம் என்ற வார்த்தையே இல்லாது, உதாரண குணத்தாலே பகைவனுக்கும் அருள் செய்து, அவனை ரக்ஷித்து உயர்த்தியவன் *ரக்ஷா வாமனன்*.

3.52 வாமனாவதாரம் என்பது ஓர் சுழல். அதை பாடாத ரிஷியோ, ஆழ்வாரோ, ஆசாரியரோ இல்லை. பதிவ்ரதையான வால்மீகியும் பாடினான்.

3.53 *வல்மீகத: ச்ரவணதோ வஸ்ரீத4ாத் மநஸ்தே*
*ஜாதோ ப3பூ4வ ஸ முநி: கவி ஸார்வபெ4ளம: |*
*கே3ாதே 3 கிமத்பு4தமித3ம் யத3மீ ஸ்வத3ந்தே*
*வக்த்ராரவிந்த3 மகரந்த3 நிப4ா: ப்ரப3ந்த4ா: ||*
- கோதாஸ்தி 7

பூமியின் ஒரு அங்கமான காதாகிய வால்மீகியே கவி சக்கரவர்த்தி ஆனான் எனில் அப்பூமியின் திருவதாராமாகிய ஆண்டாளின் திரு முகத்திலிருந்து எழுந்த ப்ரந்தங்களின் இனிமைக்கும் பொருளுக்கும் எல்லை என்பதும் உண்டோ?

3.54 *அறிந்து அறிந்து வாமனன் அடியிணையே வணங்கினால்*
*செறிந்து எழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும்*
- திருச்சந்த விருத்தம் 74

உபாயம், பலன் இரண்டும் அந்த வாமனனின் திருவடிகளே என்று அறிந்து சரணாகதி செய்து, பொறுப்பை அவனிடத்தில் ஒப்படைத்தால் நெருங்கி உண்டான ஞானத்துடன் பக்தியான செல்வமும் சிறக்கும். அதனாலே வாமனன் பேர் பாடி

3.55 ஆண்டாள் இடையர்களை இங்கே சொல்லி தானும் அனுகாரம் செய்யும்போது அது கிருஷ்ணானுபவமே அன்றி வாமனனைச் சொல்லுமோ? இங்கு உத்தமன் என்றது கண்ணனையே.

3.56 த்ரஷ்டும் இச்சாமி தே ரூபம் ஐச்வர்யம் புருஷோத்தம!
என்ற பார்த்தனின் ப்ராத்தனைக்கு இணங்கிய பார்த்தசாரதி
பஸ்யேமே பார்த்த ரூபாணி
- மஹாபாரதம்
என்று ஒங்கி உலகம் முழுதும் வியாபித்தவன் கண்ணனே!. காலாலே அளந்தான் என்று சொல்லவில்லையாகில் விஜயனுக்காக விசுவரூபத்தால் தன் திருமேனியால் வையம் முழுதிலும் வியாபித்து அளந்த தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணனே ஒங்கி உலகளந்த உத்தமன். வாமனன் இரண்டு திருவடிகளால் அளந்தான் என்றால் இவன் ஆயிரம் திருவடிகளால் அளந்தான்

3.57 தீர்த்தன் உலகு அளந்த சேவடி மேல் பூந்தாமம்
சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு
பார்த்தன் தெளிந்து ஓழிந்த பைந்துழாயன் பெருமை
பேர்த்ததும் ஒருவரால் பேசக்கிடந்ததே
- திருவாய்மொழி 2-8-6
கண்ணன் அடிக்கிட்ட பூக்கள் சிவன் சிரஸிலே கண்டான் அர்ச்சுனன். அதனாலே உலகளந்த பர தத்துவமான கண்ணனே உத்தமன்.

திரிவிக்கிரமாவதாரத்துடன் கிருஷ்ணனையும் சேர்த்து அனுபவிக்கி

3.58 அப்படிப்பட்ட உத்தம புருஷனனை திருநாம ஸங்கீர்த்தனத்தால் மகிழ்வித்து, தாமும் மகிழ வேண்டி அவன் பேர் பாடி.

3.59 கட்டிபொன் போலே பகவான். பணிப்பொன் போலே அவன் திருநாமம். அதனால் அவனை விட்டு அவன் பேரைப் பாடி

3.60 தாயை அடிக்கும் பிள்ளையும் அடித்த கை நோவும்போது "அம்மா" என்று அந்த பெயரிட்டுத்தானே அழைக்கிறான். அதனாலே *பேர் பாடி*

3.61 பகவான் நாமாவைச் சொல்ல குலம், கோத்திரம், வயசு, அறிவு போன்ற தகுதி தேவை இல்லாதலால் அனைவரும் *பேர் பாடி*.

3.62 பகவந் நாம ஸங்கீர்த்தனமே ஸ்வயம் ப்ரயோஜனம். மற்றைய அற்ப பலன்களை அபேஷிக்காமல் *பேர் பாடி*.

3.63 இந்திரன் இழந்த செல்வத்தை பெற்றான். மஹாபலி வளைத்த செல்வத்தை இழந்தான். இதை செய்து முடித்த செல்வனுக்கு பல்லாண்டு என்று *பேர் பாடி*.

3.64 *நாங்கள் நம் பாவைக்கு* தத்துவ ஹித புருஷார்த்தங்களை அறிந்து எம்பெருமானிடம் சரணாகதி செய்த ப்ரபன்னர்களாகிய *நாங்கள்*.

3.65 பாடி மடியேற்காத *நாங்கள்*.
செய்த காரியத்தை சொல்லி தற்பெருமை கொள்ளாத *நாங்கள்*.

3.66 *சாற்று நீராடினால்*. என்று பலனனைச் சொல்லுமிடத்து உபாயத்தை மறுமுறை சொன்னது பெறும் புருஷார்த்தத்தின் மேன்மையை காட்டியது.

3.67 *சாற்று நீராடினால்*, கிடைக்காத இன்பம் கிட்டியபோது, அதில் மனம் நெகிழ்ந்தவன், மகிழ்ச்சியால் பலனுக்கு முன்னே அதை அடைந்த முறையை புகழ்வது இயல்பு.

3.68 ஜன்ம ஜன்மாக வந்த கடுவினை கழன்று இப்படிப்பட்ட உயர்ந்த புருஷார்த்தம் நமக்கும் வாய்த்ததே என்று நினைக்குங்கால் மற்றவருக்கு அதை எடுத்துரைப்பது *சாற்று நீராடினால்* என்று.

3.69 *செந்நெல் ஊடு கயல் உகள* என்று பறுத்த மீன்கள் நதியில் துள்ளி விளையாடின
*உள்ளூரும் சிந்தை நோய் எனக்கே தந்து என்*
*ஒளி வளையும் மாநிறமும் கொண்டார் இங்கே*

தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்
**சேல் உகளும்** திருவரங்கம் நம்மூர் என்னக்
கள்ளூரும் பைந்துழாய் மாலையானை
கனவிடத்தில் யான் காண்பன் கண்டபோது
'புள்ளூரும் கள்வா நீ போகேல்' என்பன்
என்றாலும் இது நக்கு ஓர் புலவிதானே
- திருநெடுந்தாண்டகம் 23

கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து உலகம் கைப்படுத்து
பொள்ளைக் கரத்த போதகத்தின் துன்பம் தவிர்த்த புனிதனிடம்
பள்ளச் செறுவில் கயல் உகளப் பழனக் கழனி அதனுள் போய்
புள்ளுப் பிள்ளைக்கு இறை தேடும் புள்ளம் பூதங் குடிதானே
- பெரிய திருமொழி 5-1-2

3.70 ஊடு கயல் உகள சரணாகதி என்பது ஆறு அறிவுடைய மனிதனுக்குத்தான் என்றில்லை. பறவை, விலங்கு, என்று அறிவுள்ள எல்லா சேதனங்களும் இதற்கு அதிகாரி.

3.71 பஶு மநுஷ்ய: பக்ஷீ வா யே வைஷ்ணவ ஸம்ஶ்ரய:
தேநைவ தே ப்ராயஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம்பதம்
- சாண்டில்ய ஸ்மிருதி

மனுஷ்யனுக்கு முன்னே பசுவையும் பின்னே பறவையையும் வைத்து பரமபதம் என்றது எல்லா ஜீவனுக்கும் இது.

3.72 பூம் குவளைப் போதில் குவளை புஷ்பம் என்பது சேதனனின் இதய புண்டரீக கமலத்தை கட்டியது

3.73 பொறி வண்டு என்பது அழகிய புள்ளிகள் நிரம்பிய வண்டு என்று ஸாக்ஷாத் பகவானைச் சொல்லியது

3.74 கண் படுப்ப. பகவான் என்னும் வண்டானது, ப்ரபன்னர்களின் இதயத்தில் அமர்ந்து, ப்ரபத்தி என்னும் தேனைப் பருகி தன் காரியம் கைகூடியதே என்று சலனமின்றி தன்னை மறந்து உறங்கியது.

3.75 மின்னனைய நுண்ணிடையார்
விரிகுழல் மேல் நுழைந்த வண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிதமர்ந்தாய்! உன்னைக் கண்டார்

*என்ன நோன்பு நோற்றாள்கொலோ*
*இவனைப் பெற்ற வயிறு உடையாள்*
- பெரியாழ்வார் திருமொழி

என்று பகவானை ஒரு வண்டாகவே அனுபவித்தார் அன்றோ.

3.76 வண்டு என்பது ஷடச்சரம். ஆறு கால் உடையது. பகவானுக்கும் ஆறு கால். *ஞான, பல, ஐசுவர்ய, வீர்ய, சக்தி தேஜஸ்* என்னும் ஆறு. இவன் ஷாட்குண்ய பரிபூர்ணன்.

3.77 *தேங்காதே* என்பது அஞ்சாதே. ப்ரபத்திக்கு பிறகு தனக்கு என்று பகவானிடம் வேண்டுவது ஒன்றுமில்லை என்று அறிந்து, எம்பெருமான் நம்மை நிச்சயம் ரக்ஷித்தே தீருவான் என்ற மஹாவிசுவாசம் கொண்ட ப்ரபன்னன், தயங்காமல், மருளாமல் இருப்பது.

*திண்மை குறையாமைக்கும் * நிறைகைக்கும் * தீவினையால்*
*உண்மை மறவாமைக்கும் * உள மதியில் உகக்கைக்கும் *
*தண்மை கழியாமைக்கும் * தரிக்கைக்கும் தணிகைக்கும் *
*வண்மை உடை அருளாளர் * வாசகங்கள் மறவேனே*
- அடைக்கலப்பத்து 8

3.78 *புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி* தேஹம் அழியும் நேரத்தில், அர்ச்சிஸும், அமானவனும், ஆதிவாஹிர்கள் மூலமாய் *முலை பற்றி* என்று அர்ச்சிராதி மார்க்கம் வழியாக ப்ரபன்னரை பரமபதம் அழைத்து செல்வது.

3.79 நித்யரும் முக்தரும் இப்பிரபன்னனை "வருக வருக" என்று ஸ்வஸ்வாகதம் சொல்லி அழைத்து, அர்க்கயம், பாத்யம், ஆசமநீயம் அளித்து அவர்களை வணங்கி வரவேற்பது *வாங்க*.

3.80 *தெருளார் பிரமபுரத்து இறை சேர்ந்து இடர் தீர்ந்தவர் தம்*
*மருளார் பிரமபுரச் சிறை தீர்ந்தபின் வந்து எதிர் கொண்டு*
*அருளால் அமரர் நடத்த இம்மாயை கடந்தற் பின்*
*சுருளார் பவ நரகர் சுழல் ஆற்றின் சுழற்றியிலே*
- பரமதபங்கம் 14

உள் உறைவனுடன் சேர்ந்து, உடல் எனும் இடர் நீங்கி உவந்தவன் அருளாலே ஆதிதேவர் அழைப்புடன் ப்ரகிருதி மண்டலம் தாண்டி பிறவிக் கடலின் சுழலைக் கடக்கின்றனரே.

3.81 தொல்வினை அகல, எம்பெருமானின் திருவருளாலே ப்ரபத்தி என்னும் பவித்திரமான காரியத்தை செய்து முடித்ததால் இந்த ப்ரபன்னர்கள் பெருமை உடைய பசுக்கள், *பெரும் பசுக்கள்*.

3.82 பிரபன்னர்கள் ஜீவித காலம் வரை, பகவத் பாகவத கைங்கர்யத்தில் ஈடுபட்டு நல்ல முறையில் காலம் கழித்து, மற்றவரையும் ஆனந்திப்பது *குடம் நிறைக்கும்*.

3.83 *நீங்காத செல்வம்* என்பது பரமபதத்தில் போய் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் நித்ய கைங்கர்யம் செய்து மகிழ்வதே. *நித்ய கிங்கரோ பவ:*

3.84 *நிறைந்து* என்பது அந்த பரமபத இன்பமானது எப்போதும் குறைவின்றி, தடையின்றி, கால வரம்பின்றி தேச விசேஷத்தால் சிறப்பாகி நிற்பது.

3.85 *த்வத்$_3$பே$_4$காை$_3$க ஸ்வபே$_4$க$_3$ம் த$_3$யிதம் அநுசரம்*
*த்வத் க்ருதே மாம் குருஷ்வ ||*

- ந்யாஸ திலகம் 31

என்று உன்னை அனுபவித்தலையே எனக்கு ஆனந்தமாய் ஆக்கி, உனக்கு பிரியனாய் கைங்கர்யம் செய்பவனாய் உன் பயனுக்காகவே என்னை செய்தருள வேண்டும் என்றார் போலே. அது *நிறைந்து*.

3.86 *ஸதாசார்ய பரிக்ரஹத்துக்கு முன்புள்ள அநாதி காலம் எல்லாம் ஒரு காள ராத்ரி. பின்பு தேஹாவஸானத்தளவும் நல்விடிவு. மேல் முழுக்க ஸ்வச்சசந்த கைங்கர்ய மஹோத்ஸவ திவஸம்*

- ரஹஸ்ய ரத்நாவளி

சேதனன் எம்பெருமானுக்கு சமமான ஞானத்தை பெற்று செய்து அனுபவிக்கும் கைங்கர்யங்கள் பட்டப் பகல் போலே பிரகாசிக்கும். அது *நிறைந்து*.

3.87 *தீங்கின்றி நாடு எல்லாம்* என்பது இந்த ப்ரபன்னர்களுக்கு எம்பெருமான் தானே செல்வம் யாவும் அளிக்கிறான்

3.88 *ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:* என்ற ப்ரமாணத்தின்படி ஐந்து அங்கங்களோடு பரப்த்தி செய்தவர்கள், உத்தமன் பேர் பாடியே மகிழ்ந்திருந்தாலும் யுக்தாயுக்தங்களை அறிந்த எம்பெருமான்

தானே வலிய வந்து அளிக்கும் ஆனுஷங்கிக பலன்கள் *தீங்கின்றி நாடெல்லாம்*

3.89 *வானாளும் மாமதிபோல் வெண் குடையிற் கீழ், மன்னவர் தம்*
*கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்*
*தேனார் பூஞ்சோலைத் திருவேங்கட மலை மேல்*
*கானறாய்ப் பாயும் கருத்து உடையேன் ஆவேனே.*
- பெருமாள் திருமொழி 4-7

*ஆனாத செல்வத்து அரம்பையர்கள் நற்சூழ*
*வானாளும் செல்வமும் மண் அரசும் யான் வேண்டேன்*
*தேனார் பூஞ் சோலைத் திருவேங்கடச் சுனையிலே*
*மீனாய் பிறக்கும் விதி உடையவன் ஆவேனே*
- பெருமாள் திருமொழி 4-2

என்று பாடிய குலசேகராழ்வார் பக்கலிலே இதைக் காணலாம்.

3.90 *விட்டாரை விடாதாள் திரு* என்னும் புறநானுறிலே இதைக் காணலாம்

3.91 *மன மாசு தீரும் அருவினையும் சாரா*
*தனம் ஆய தானே கைகூடும் - புனம் மேய*
*பூந்துழாயான் அடிக்கே போதோடு நீரேந்தி*
*தம் தொழா நிற்பர் தமர்*
- முதல் திருவந்தாதி 43

என்று எம்பெருமானையே நினைப்பவர்களுக்கு பக்தியும் ஏனைய செல்வங்களும் தானே வந்து சேரும் என்றார்.

3.92 *இன்று சாதல் நின்று சாதல் அன்றி யாரும் வையகத்து*
*ஒன்றி நின்று வாழ்தல் இன்மை கண்டு நீசர் என்கொலோ*
*அன்று பார் அளந்த பாத போதை ஒன்றி உன்னி வானின் மேல்*
*சென்று சென்று தேவராய் இருக்கிலாத வண்ணமே*
- திருச்சந்த விருத்தம் 66

சென்று சென்று என்று அர்ச்சிராதி மார்க்கமாய் போய் பரமபதத்திலே நித்யர்களோடு இன்பத்தை அனுபவியாது ஸம்ஸாரத்திலேயே உருளுகின்றீரே என்று எம்பெருமானிடம் இன்னமும் சரணாகதி செய்யதாரைச் சொன்னாரே

3.93 *திங்கள் மும்மாரி பெய்து* என்பது வெள்ளக் கேடின்றி, வறட்சி கேடின்றி ஒரு நாள் மழையும் ஒன்பது நாள் வெய்யிலுமாக மாதத்திற்கு மூன்று தடவை பெய்யும் மழை.

3.94 *நிகாமே நிகாமே ந: பர்ஜந்யோ வர்ஷதி*
- விஷ்ணு தர்மம்

என்கிறபடி விரும்பியபோது எல்லாம் மழை பொழிவது
*நல்லார் ஒருவர் உளரேல் அவருக்கென பெய்யெனப் பெய்யும் மழை*

3.95 *நீங்காத செல்வம்* கர்ம வஸத்தினால் வந்த அல்ப, அஸ்திரப் பலன் போலன்றி ப்ரபன்னனின் நோன்புக்கு மகிழ்ந்த எம்பெருமான் கருணையாலே எழுந்ததால் *நீங்காத செல்வம்*.

3.96 *எனது ஆவியுள் கலந்த பெருநல் உதவிக் கைம்மாறு*
*எனது ஆவி தந்து ஒழிந்தேன் இனி மீள்வது என்பது உண்டோ?*
*எனதாவி ஆவியும் நீ பொழில் ஏழும் உண்ட எந்தாய்*
*எனது ஆவி யார்? யான் ஆர்? தந்து நீ கொண்டு ஆக்கினையே.*
- திருவாய்மொழி 2-3-4

என்று பகவானிடம் ஆத்மாவையே ஸமர்பித்த ப்ரபன்னர்களுக்கு பகவானே வழங்கும் இன்பம்.

3.97 *பாபாநாம் வா ஸுபாநாம் வா வதார்ஹாணம் ப்லவங்கம: |*
*கார்யம் கருணமார்யேண ந கஸ்சித் ந அப்ராத்யதி ||*
- ராமாயணம்

என்ற பிராட்டியின் புருஷாகாரத்தாலே வந்த பெரும் செல்வம்.

3.98 *கர்மண்யே அதி$_4$காரஸ்தே மா ப$_2$லேஷு கத$_3$ாசந |*
*மா கர்ம ப$_2$ல ஹேதுர் பூ$_4$ர்மா தே ஸங்கோ$_3$ஸ்தவ கர்மணி ||*
- பகவத்கீதை

என்று ப்ரபன்னர்கள் பலன் நோக்காது கடைமையைச் செய்தாலும் பகவானே வலிய வந்து அளித்த செல்வம்

*கர்மணீ ஏவ* - *விதிக்கப்பட்ட கர்மாவில் மட்டுமே*
*தே அதிகார* - *உனக்கு தகுதி உண்டு*
*பலேஷு* - *அதற்கு சொன்ன பலன்களில்*
*காதாசந* - *ஒரு போதும்*
*மா அதிகார:* *உனக்கு பற்று வேண்டாம்*
*கர்ம ஹேது:* - *செய்யும் செய்லகளுக்கு உன்னை கர்த்தாவாகவும்*
*பல ஹேது* - *பலன்களுக்கு உன்னை காரணாமகவும்*
*மா பூ:* - *ஆகாதே*
*அகர்மணி* *கர்மாவை செய்யாமல் இருப்பதிலும்*
*தே: ஸங்க:* - *உனக்கு பற்றானது*
*மா அஸ்து* *வேண்டாம்*

*மூன்று கர்மாக்கள்*
*நித்ய - ஸந்தியாவந்தனம், பகவத் ஆராதானம்*
*நைமித்ய தர்ப்பணம், சிராத்தம் போன்றவை*
*காம்ய விருப்பத்தால், வெருண ஜபம், புத்ரகாமேஷ்டி யாகம்*

3.99 அழியும் பொருள் உள்ளவரை அனுபவிக்க, தேஹம் இராது அழியாத ஜீவன் உள்ளவரை, அந்த செல்வங்கள் நிற்காது. அழியாத ஜீவனின் அனுபவம் அழியாத பர தத்துவமே.

3.100 *நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்*
*தன்னையே தான் வேண்டும் செல்வம் போல் மாயத்தால்*
*மின்னையே சேர் திகிரி விற்றுவக் கோட்டம்மானே*
*நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியேனே*
- பெருமாள் திருமொழி 5-9

என்று பகவானே வேண்டும் செல்வம் வேண்டாம் என விலக்கியவர்க்கு அவனே செல்வம்.

3.101 *தனிக்கோலாய் தாமரையாள் இடங்கொண்டு திகழும் திருமாலே*
*உமக்கேயாய் அடியாரோடு பணி செய்யும் பேரின்பம் தருவாயே*
*விட்ட பயனை மறந்து மருளில் வீழ்ந்த என்னை மீட்டி ஆளும்*
*கிட்டி வந்து அருளும் உம் கருணைக்கடலே என்றும் காக்கும்*
- நெஞ்சில் அஞ்சு 10

என்று பகவான் நாராயணன் பிராட்டி சகிதமாய் தான் ஒருவனே பர தத்துவமாய் நடத்தும் அரசாட்சியில், முக்தர், நித்யரோடு சேர்ந்து நித்ய கைங்கர்யம் செய்யும் பேறை எனக்கு அளிப்பாயே என்று சொன்னோம்

3.102 *விண்ணவர் வேண்டி விலக்கு இன்றி மேவும் அடிமை எல்லாம்*
*மண்ணுலகத்தில் மகிழ்ந்து அடைகின்றனர் வண் துவரை*
*கண்ணன் அடைக்கலம் கொள்ளக் கடன்கள் கழற்றிய நம்*
*பண் அமரும் தமிழ் வேதம் அறிந்த பகவர்களே*
- அதிகார சங்கிரகம் 22 (உத்தர க்ருத்யாதிகாரம்)

ப்ரபன்னரின் சுமையை எம்பெருமான் ஏற்றதால் கடன் நீங்கி நித்யரைப் போல் தடையில்லா கைங்கர்ய ஆனந்தத்தை அடைந்தனர். அதனால் *தீங்கின்றி நாடெல்லாம்*

3.103 ஸம்ஸாரா வர்த வேக$_3$ ப்ரஸமந ஶ்ரீப$_4$த்$_3$ருக்
தே$_3$சிக ப்ரேக்ஷிதோSஹம்
ஸந்த்யக்தோSந்யை: உபாயைர் அநுசித சரிதேஷ்-
வத்$_3$ய ஶாந்தாபி$_4$ ஸந்தி$_4$: |
நி: ஸங்கஸ் தத்வ த்ருஷ்ட்யா நிரவதி$_4$க த$_3$யம்
ப்ராத்$_2$ய ஸம்ரஷம் த்வாம்
ந்யஸ்ய தவத்பாத$_3$ பத்$_3$மே வரத நிஜப$_4$ரம்
நிர்ப$_4$ரோ நிர்ப$_4$யோSஸ்மி ||

- ந்யாஸ விம்சதி 22

என்று எம்பெருமானிடம் சொல்லி, ப்ரபத்தி செய்து, அவன் திருவடியில் பொறுப்பை ஸமர்ப்பித்து, பாரம் நீங்கி, அச்சமற்று நற்பொழுதைக் கழிக்கிறேன் என்றவாறு.

3.104 நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே

- திருச்சந்த விருத்தம் 65

என்று எம்பெருமான் உள்ளத்தில் வந்து உறைந்திருக்க கைங்கர்ய ஆனந்தம் என்பது எப்போதுமே. தேசத்தினால் விளைவது அல்ல.

3.105 உய்த்து உணர்வென்னும் ஒளி கொள் விளக்கு ஏற்றி
வைத்தவனை நாடி வலைப் படுத்தேன் - மெத்தனவே
நின்றான் இருந்தான் கிடந்தான் என் நெஞ்சத்து
பொன்றாமை மாயன் புகுந்து

- மூன்றாம் திருவந்தாதி 94

பகவான் ஒருவனே ஸித்தோபாயம் என அறிந்து அவன் பாதங்களில் ப்ரபத்தி என்னும் ஸாத்யோபயத்தை செய்து அதனால் அவன் சீற்றத்தைத் தவிர்த்து அவனையே அனுபவிக்கும் பாக்யம் பெற்றவர்களிடத்தே அவன் வந்து, நின்று, உட்கார்ந்து, படுத்தே கிடக்கிறான் அவர்தம் உள்ளத்திலே. அதுதான் நீங்காத செல்வம்.

3.106 உளது என்று இறுமாறுவார் உண்டு இல்லை என்று
தளர்தல் அதன் அருகும் சாரார் - அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று

- இரண்டாம் திருவந்தாதி 45

அப்படி எம்பெருமான் ஆனுஷங்கிகமாய் அளித்த செல்வத்தை பெற்றதால் கர்வமும் அதை இழந்ததால் வருத்துமும் அடையாத ப்ரபன்னர்கள். எம்பெருமானையே அனுபவிப்பவர்கள்.

3.107 தரித்திருந்தேன் ஆகவே தாரகணப் போர்
விரித்து உரைத்த வெந்நாகத்து உன்னை - தெரித்து எழுதி

*வாசித்துங் கேட்டும் வணக்கி வழிபட்டும்*
*பூசித்தும் போக்கினேன் போது*

- நான்முகன் திருவந்தாதி 63

நக்ஷத்திரங்களின் சஞ்சாரத்தை வெளியிட்ட ஆதி சேஷனுக்கு அந்தராத்மாவான உன்னை அநுஸந்தித்தும், எழுதியும், படித்தும், கேட்டும், ஆராதித்தும், பூஜித்தும் இப்பூமியில் காலத்தை கடத்தினேன். அதனால் சத்தை பெற்றேன். நீயே *நீங்காத செல்வம்*.

3.108 ஸ்ரீ விசிஷ்டனான அந்த நாராயணன் ஒருவனே *நீங்காத செல்வம்*

*வஶீ வத3ாந்யோ கு3ணவாந் ருஜூ ஶ் ஶுசிர்*
*ம்ருது3ர் த3யாளுர் மது4ரஸ் ஸ்தி4ரஸ் ஸம: |*
*க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வாப4ாவதஸ்*
*ஸமஸ்த கல்யாண கு3ணாம்ருதோத3தி4: ||*

- ஸ்தோத்ரரத்னம் 18

ப்ரபன்னர்களுக்கு வசப்படவனாய், தன்னையே தரும் வள்ளலாய், ஸௌலப்யனாய், மனோவாக்காயங்களில் ஒன்றியவனாய், பிரிவை பொறுக்காதவானாய், அடியவரின் துக்கத்தை சகியாத கருணா மூர்த்தியாய், இனியவனாய், ரக்ஷிக்கும் விஷயத்தில் நிலையாய் எல்லோருக்கும் சமனாய் அடியவரின் காரியங்களைத் தன் காரியமாய் நினப்பவனாய், சிறிய ஆநுகூல்யத்தையும் பெரிதாய் நினைத்திருக்கும் இயற்கையிலே எல்லா கல்யாண குணங்களையும் உடைய எம்பெருமானே *நீங்காத செல்வம்*.